# செல்வச்சந்நிதி ஆலய வழிபாட்டு மரபு – ஒரு குறிப்பு

நாச்சியார் செல்வநாயகம்

ஈழத்து முருக வழிபாட்டுத் தலங்களில் முதன்மை பெற்று விளங்குவது கதிர்காமம்.1 யாழ்ப்பாணத்து முருகன் தலங்களில் பிரசித்தி பெற்று விளங்குவது செல்வச் சந்நிதி. மட்டக்களப்பு முருகன் ஆலயங்களில் முதன்மை வகிப்பது தில்லை மண்டூர் என அழைக்கப்படும் மண்டூர்க் கந்தசுவாமிகோயில். இம்மூன்று ஆலயங்களினதும் வழிபாட்டு மரபில் மிகத் தொன்மையான முக்கிய பொதுப் பண்புகள் இடம்பெற்று வருவதை அவதானிக்கலாம். இந்து சமய மரபிலே இரண்டு வகையான வழிபாட்டு மரபுகள் பேணப்பட்ட வருகின்றன.

(அ) ஆகமம் சார்ந்த வழிபாட்டு மரபு.

(ஆ) ஆகமம்சாராத வழிபாட்டு மரபு அல்லது கிராமிய தெய்வ வழிபாட்டு நெறி.

என்பனவே அவை. ஆகமம் சாராத வழிபாட்டு நெறிகளைக் கடைப்பிடிக்கும் ஆலயங்களாகச் சிறப்படைந்து விளங்குபவை கதிர்காமம், செல்வச் சந்நிதி மண்டூர் என்பன.

ஆகம மரபு சாராத வழிபாட்டுத் தலங்களைப் பிரித்தறியக் கூடியதாய் இருக்கும் ஏதுக்கள்:

(அ) கோயிற் சடங்குகள் ஆகம வரன்முறைக்கு உட்படாமை.

(ஆ) பெரும்பான்மையும் நகரங்களிற் காணப்படாது கிராமங்களிற் குறிப்பாகச் சீவனோபாயத் தொழில்களில் ஈடுபட்டுள்ள மக்கள் வதிவிடங்களிற் காணப்படுதல்.

(இ) கோயிலமைப்பில் ஆகம சிற்ப சாத்திர விதிமுறை பேணப்படாமை.

ஆகம மரபிலமைந்த பல ஆலயங்களின் நிர்வாகம், வேதாகம மரபுகளைக் கடைப்பிடிக்கும் பிராமணீய அங்கீகாரத்துக்குட்பட்டிருக்க, ஆகம மரபு சாராத வழிபாட்டுத் தலங்கள் பெரும்பாலும் கிராமிய மக்கள் வாழ்விடங்களில் அமைந்து விளங்குவதுடன், அவர்களது நிர்வாகத்துக்குட்பட்டு விளங்குவதையும் காணமுடிகிறது.

ஆகம மரபு முறையிலமையாத ஆலயங்கள் பெரும்பாலும் கிராமப் புறங்களிலேயே அமைந்து விளங்குகின்றன. சிவனோபாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், அதாவது அவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தீர்க்கவும் நன்மையைப் பெருக்கவும் வேண்டி வழிபாடியற்றும் வகையில் விவசாய நிலங்களை அண்டியும், ஆற்றோரங்களையும், காட்டுப் பகுதிகளை அண்டியும் ஆலயங்களை அமைத்து வழிபாடாற்றுவர். இவ்வாலயங்கள் ஆகமச்சிற்ப சாத்திரம் பிரமாணத்திற்குட்படாதவையாயும் அங்கு நடைபெறும் வழிபாட்டு முறைகள் ஆகம மரபைத் தழுவாதவையாயும் இருப்பதை அவதானிக்கலாம்

கதிர்காமமும், செல்வச் சந்நிதியும், மண்டூரும், பிராமணரல்லாதோரின் பரிபாலனத்தில் அமைந்து விளங்குகின்றன. கதிர்காம ஆலயம் வேடர் குலச் சந்ததியினராலும், செல்வச் சந்நிதியும், மண்டூர்க் கந்தசாமி கோயிலும் கடற் தொழிலைச் செய்வோராலும் பராமரிக்கப்பட்டுப் பூசைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு மேற்கூறப்பட்ட மூன்று ஆலயங்களின் நிர்வாகமும் அவ்வவ்விடங்களிலுமுள்ள சிவனோபாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களாற் பராமரிக்கப்பட்டு வருதல் புலப்படுகி ன்றது. ஆகம மரபிற்குள் அடங்காதன வாய்க் கோயில் அமைப்பும் வழிபாட்டு முறைகளும் இவற்றிடையே நிகழ்ந்து வருகின்றன. ஆகமமரபு பேணும் ஆலயங்கள் அவற்றின் கட்டிட, சிற்ப, கிரியை முறைகளில் ஒன்றுபடுவது போன்று, ஆகம முறையைத் தழுவாத வழிபாட்டு முறைகளைக் கொண்ட இவ்வாலயங்கள் தம்மிடையே சில பொதுப் பண்புகளைக் கொண்டு விளங்குகின்றன. இம்மூன்று பெரும் ஆலயங்களும் மடாலய அமைப்பில் கட்டப்பட்டுள்ளன.[2]

மனித சமுதாயத்தின் ஆரம்பகாலங்களிற் காணப்பட்ட வழிபாடு முறை, அதனது வாழ்நிலையுடன் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தது. இயற்கையிடமிருந்து தனது தேவையைப் பூர்த்தி செய்த மனிதன், இடையூறுகள் நேர்ந்த பொழுது தனக்கு மேற்பட்ட சக்திகள் மனித வாழ்வுக்கு இடையூறாக அல்லது சாதகமாக இல்லாத நிலையில் அவற்றை வழிபாடு செய்வதன் மூலம் தனக்குச் சாதகமாகச் செய்யலாம் என நம்பினான். இந்த வகையில் இந்துமதத்தின் முதன் நூலாகக் கொள்ளப்படும் வேதத்திலும் இயற்கை வழிபாடு சிறப்பிடம் பெறுவதை அவதானிக்கலாம். உலகில் நின்று நிலைபெற்ற மதங்கள் யாவற்றிலும் இத்தகைய இயற்கை வழிபாடே ஆரம்ப காலத்தில் பேணப்பட்டிருந்தமையை மதவரலாறுகள் புலப்படுத்துகின்றன. இயற்கை வழிபாடே காலப்போக்கில் ஒழுங்குபடுத்தப்பட்டு ஆகம மரபாக உருப்பெற்றிருக்க வேண்டும்.

எனவே இந்து மரபில், ஆரம்ப காலத்தில் இயற்கை வழிபாடு பேணப்பட்டு வந்துள்ளமையையும் பின்னர் ஆகம வழிபாடு உருவாக்கம் பெற்றமையையும் இந்து சமய வரலாற்றின் மூலம் நாம் உணரமுடிகிறது. இந்த வகையில் கதிர்காமம், செல்வச் சந்நிதி, மண்டூர் போன்ற திருப்படைக் கோயில்களில் முருக வழிபாட்டின் மிகப் பழைமையான கூறுகளைக் கொண்ட இயற்கை நெறி வழிபாடு முக்கியத்துவம் பெற்றிருப்பதையும், அவை இந்து மத வழிபாட்டின்

பண்டை மரபுகளைப் பேணி நிற்பதையும் அறிந்து கொள்ளலாம். [3]

## சந்நிதியான் வழிபாட்டு முறைமை

"சந்நிதி என்னுஞ் சொல் செல்வச் சந்நிதிக் கோயிலைக் குறிப்பதற்கு எப்பொழுது கையாளப்பட்டது என்ற வினாக்களுக்கு விளக்கம் கொடுப்பதற்குப் போதிய சான்றாதாரங்கள் இல்லை. கதிர்காமத்திலே கந்தன் சூக்கும வடிவாக நிற்கத் தொண்டமானாற்றுக் கரையிலே காட்சிக்குரியதாக வேல் வடிவிலே கந்தன் வீற்றிருந்த காரணத்தாலே இது நல்ல இருக்கை என்று அடிப்படையிலே சந்நிதி என்ற சொல் இப்புனித இடத்தைக் குறிப்பதற்குப் பயன்பட்டிருக்கலாம்" என்பர். [4]

"சந்நிதி" என்னும் வடமொழிச் சொல் சம்+நிதி எனப் பிரிந்து நிற்கும். இதன் கருத்து:

1) அண்மையில் இருப்பது; அண்மை நிலை
2) முன் நிற்றல்

என்பனவாகும். எனவே சந்நிதி என்பது முருகன் முன்னிற்றலைக் குறிக்கின்றது. [5] அகராதியில் சந்நிதி என்னும் சொல்லுக்கு அண்மைநிலை, தெய்வம் குரு பெரியோர் இவர்களின் திருமுன்பு, கோயில் சந்நிதானம் எனப் பொருள்கள் கொடுக்கப் பட்டுள்ளன. [6] செல்வச் சந்நிதி என்பது அருட்செல்வன் முருகனுடைய திருமுன்னிலை எனப்பொருள் கொள்ளப்படலாம். அனுபூதிமானாகிய மருதர்-கதிர்காமர் முருகன் அருட் தேக்கத்தைக் கண்டு வழிபட்ட இடம் என்று செல்வச் சந்நிதி பற்றிய ஐதிகம் எடுத்துக் கூறுகின்றமை நோக்கற்பாலது. உயர்ந்த மலைகளிலிருந்து அருவிகள் இயல்பாக ஊற்றெடுத்துப் பாய்வது போன்று முருகனின் அருள் நலம் தானாகப் பிரவாகிக்கும் இடம் சந்நிதி என்பது அங்கு செல்லும் அடியார்கள், அன்பர்கள் தன்மைகளிலிருந்து அறிய முடிகின்றது.

சந்நிதி ஆலய வழிபாட்டு முறைமையின் வரலாறு பற்றி அறிவதற்குத் தெளிவான சான்றாதாரங்கள் இல்லை. எனினும் இவ்வழிபாட்டு முறைமையில் மருதர்-கதிர்காமர் பற்றிய கருத்துக்கள் முக்கியத்துவமுடையன. அவரே தற்போதைய ஆலயத்தில் வேல் வைத்து வழிபாட்டைத் தொடக்கியவர் என்று கர்ணபரம்பரைச் செய்தி மூலம் அறியக்கிடக்கின்றது.

சந்நிதி ஆலய வழிபாட்டு முறையை மருதர்-கதிர்காமர் வழித்தோன்றலில் உள்ள ஆண் சந்ததியினர் ஆற்றி வருகின்றனர். மருதர்-கதிர்காமர் என்பவரிடம் முருகனே வாய் கட்டி பூசை செய் எனப் பணித்ததாகவும் அதற்கமைய மௌன பூசையாகிய ஞானபூசை நடைபெற்று வருவதாகவும் அறியப்படுகின்றது. ஞானத்திற்கு அடையாளமாகவே வெள்ளைத் துணியால் வாயைக் கட்டிப் பூசை செய்வதாகவும் கருதப்படுகின்றது. கதிர்காமத்திலும், மண்டூர் ஆலயத்திலும் இத்தகைய முறைமையே அங்கு பூசனை செய்யும் கப்புறாளைகள், கப்புகனார்களினாற் பின்பற்றப்பட்டு வருகின்றது. தத்துவங் கடந்த பொருளை வழிபடும் கந்தழி வழிபாடே கதிர்காமத்து வழிபாடென்பது சிலர் துணிவர். [7] சந்நிதியிலும் எந்த விதமான மந்திரங்களும் உச்சரிக்காமற் பத்திரங்களைச் (இலைகளை) சமர்ப்பித்து வழிபாடு இயற்றுவர். இது சிந்தையை அடக்கிப் பூசனை செய்யும் தத்துவங்

கடந்த நிலைக்கு இட்டுச் செல்வதாக அமைவதைக் காணலாம்.

ஆகமச் சிற்பசாத்திரப் பிரமாணங்க ளுக்குட்படாத ஆலய அமைப்பு முறையை யும் பூசை முறைமையையும் கொண்டு பேணப்பட்டு வந்த சந்நிதி ஆலயப் பூசை முறையில் இப்பொழுது படிப்படியாக ஆகமச் செல்வாக்கு இடம்பெற்று வருவது சிந்தனைக் குரியது. இது பற்றிக் கா. சிவத் தம்பி அவர்களின் பின்வரும் கூற்று நோக்கற்பாலது.

"சந்நிதிக்கான சமூக அங்கீகாரம் வளர வளரச் சந்நிதிக்குழும் சமூக அதிகாரச் சின்னங்களைப் பகிர்ந்துகொள்ளும் நிலை ஏற்பட ஏற்படச் சமஸ்கிருத நெறிப்பாடு வளர்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும். மந்திரமில்லாமலே சமஸ்கிருத நெறிப்படுகை வளர்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும். மந்திரமில்லா மலே சமஸ்கிருத நெறிப்படுகை நடக்கும் அசாதாரண மத நடைமுறை யினைச் சந்நிதியிலே காணலாம்"[8]

சமூக அசைவியக்கத்தில் ஆகமம் செல்வாக்குப் பெற்று வருவதையும் மேலான அந்தஸ்துப்பெற்று வருவதையும் இது பிரதிபலிப்பதாக அமைவையும். அத்துடன் சமூகத்தில் உயர்மட்ட நிலையை எய்தும் வண்ணம் சந்நிதியான் வழிபாட் டில் ஆகமச் செல்வாக்கு இடம்பெற வேண்டிய தவிர்க்கமுடியாத நிலையிலும் மந்திரமில்லாமலே ஆகமச் செல்வாக்கு திருவுருவங்கள், பூசகர் தீட்சை பெறல் போன்றவற்றில் இடம் பெற்றருப்பது குறிப்பிடத்தக்கது. உயர்மட்ட ஆகம வழி பாட்டாளர் என்று சொல்பவர்களையும் கவரும் வகையில் ஆகமச்செல்வாக்கு இடம்பெற வேண்டிய இன்றியமையாத ஒரு நிலை ஏற்பட்டிருக்க வேண்டும். சந்நிதி ஆலயப் பூசகர் தன்னைப் பூசைக்கு அருகதையாக்கும் வகையில் கெருடாவி லில் உள்ள தமது புரோகிதக் கடமை செய்யும் சைவக் குருக்களிடம் தீட்சை பெற்றபின், சந்நிதியில் வழிபாடு ஆற்றும் முதுநிலையில் உள்ள பூசகர் ஒருவரிட மிருந்து மறையா வழிபாட்டு முறையைக் கற்று வழிபாட்டைத் தொடங்குவர். மணமான ஒருவரே பூசை செய்யும் தகுதி யுடையவர். அறிவு அனுபவம் மேம்பட்ட ஐயர் விசேட வழிபாடுகளை இயற்றும் தகுதி வாய்ந்தவர். தினந்தோறும் நித்திய பூசைக்கு முன் பூசகர் கண்டய மாலை பட்டு வஸ்திரம் வாய்கட்டி வழிபாடிய றும் துணி என்பனவற்றை வீட்டிலிரு ந்து பனை ஓலைப் பெட்டியில் எடுத்து வந்து ஆலய உட்கிணற்றில் குளித்து மேற்கூறப்பட்டவற்றை அணிந்து வழி பாட்டைத் தொடங்குவர். வழிபாடுகள் கிரமமாக நாள்தோறும் மூன்று வேளை கள் நடை பெறும். சிலவேளைகளில் நான்கு அல்லது ஐந்து அல்லது ஆறு வேளைகளும் அடியார்களின் தேவை யைப் பூர்த்தி பண்ணும் வகையில் வழி பாடு இடம் பெறுவதுண்டு.

சனிக்கிழமைகளில் உதய வழிபாடு இடம்பெறுவதில்லை. பெருமானுக்கு முழுக்குப் பூசை மத்தியானம் 12 மணிக்கு இடம்பெறுவதுண்டு. கோயில் பாத்திரங் கள் அனைத்தும் கழுவி எள் இடித்து அதிலிருந்து வரும் எண்ணெயை வேற் பெருமானுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் பூசி வழிபாடு நடைபெறும். வழிபாட்டு நேரம் கண்டாமணி, பறை, நாதஸ்வரம், சங்கு, சேமக்கலம், சரமணி முதலான பல்வேறு வாத்தியங்கள் இசைக்க மந்திரமில்லாமல் வழிபாடு இடம்பெறும்.

இவ்வாலயத்திலே தினந்தோறும் பின்வரும் ஒழுங்கில் வழிபாடு இடம் பெறுகிறது.

1) முதலில் நந்தி வழிபாடு, அதாவது மணியில் நந்தியை நினைத்து மணியடித்து, அதன்பின் அதற்குத் தண்ணீர் ஊற்றிப் பால் வார்த்து, நீராட்டித் தூபம் காட்டி மணியடித்த பின்னர் வழிபாடு ஆரம்பமாகும். இவ்வேளையிற் குறிஞ்சி நிலத்துக்குரிய பறை ஒலிப்பது வழக்கம்.

2) மூலஸ்தானத்தில் மயில் மீதிருக்கும் வேலுக்கும், எழுந்தருளி வேலுக்கும் நீராட்டியபின் வேலின் அடிப்பகுதியில் உள்ள கற்பீடத்தில் சிவபெருமான், உமாதேவியார், தெய்வானை, கண்ணகை அம்மன் ஆகியோரையும் நினைத்துப் பாதபூசை செய்யப்படும். பின் வேலுக்கு விபூதி, சந்தனம் அணிவித்து பூமாலைசாத்தி, தூபம் காட்டி ஒற்றைத் தீபம் காட்டுவர். கதவு திறக்கப்படாமலேயே மேற்கூறப்பட்ட வழிபாடு இடம்பெற்று வருகின்றன.

3) பின் பிரகாரத்திலிருக்கும் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று பிள்ளையாருக்கு நீராட்டித் தூபம் காட்டிய பின் திரை நீக்கப்படும். இதன்பின் அடுக்குத் தீபம், கற்பூர தீபம் பஞ்சாரத்தி என்பன இடம்பெறும்.

அதனையடுத்து பின்வரும் முறையில் மூலவருக்கு உபசாரங்கள் இடம் பெறும்.

1) அடுக்குத் தீபம்

2) நாகதீபம்

3) ஒற்றைத்தீபம்

4) புருஷ தீபம்

ஆகிய உபசாரங்களுடன் விசேடமாக சந்நிதிக்கே உரிய தனித்துவமான ஒரு தட்டில் விபூதியைக் குறித்து அதில் கற்பூரம் இட்டு அந்த கற்பூரதீப வழிபாடும் இயற்றப்படும்.[9] விபூதியை மலைபோற் குவித்து அதன்மேல் கற்பூரத்தை வைத்து எரிப்பது முருகன் குறிஞ்சித் தெய்வம் என்பதை உணர்த்துவதாகலாம்.

அடுக்குத் தீப உபசாரத்தின் முன் மகா மண்டபத்தில் மூலவருக்கு அறுபத்தைந்து ஆலம் இலைகளில் அமுது படைப்பது வழக்கம். சந்நிதிக்கே உரித்தான தனி வழக்காக இது இடம்பெறுகின்றது. செந்நெல் அரிசியில் புற்கை வைத்து, பயறம்பருப்பு, வாழைக்காய்கறி சமைத்துப் புற்கை மேல் படைக்கும் இவ் அமுதப் படையல் மருந்து என்று அழைக்கப்படுகின்றது. இது தீராத நோய் தீர்க்கும் அருமருந்தாகக் கருதப்படுகின்றது. முருகனையும் அறுபத்து மூன்று நாயன்மார்களையும் மருதர்-கதிர்காமர் என்பவரையும் பிரதிநிதித்துவப் படுத்திப் படையல் இடுவதாக இப்படையல் வழக்கம் ஆரம்பமாயிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. சந்நிதியில் அமைந்திருந்த மடங்களில் அறுபத்து மூவர் பூசையும், மருதர்-கதிர்காமர் குருபூசையும் கொண்டாடப்பட்டு வந்தமை நோக்கற்பாலது.

ஆறுமுகனார் : பிரகாரப் பிள்ளையார் போன்ற உபசாரம்

வள்ளிநாயகி : இங்கும் மேற்கூறப்பட்ட முறைமை பின்பற்றப் படுகின்றது.

நாகதம்பிரான் : கோவிலின் மேற்குப்புறத்தேயுள்ள

பூவரச மரமே இக்கோவிலின் தலவிருட்சமாகக் கொள்ளப்படுகின்றது. இங்கேயே நாகதம் பிரானுக்கும் நவக்கிரகங்களுக்கும் விசேடமாகச் சனீஸ்வரனுக்கும் வழிபாடு இங்கு இடம் பெறுகின்றன.

சண்டேசுரர் : பிரகாரப் பிள்ளையாருக்குச் செய்யும் உபசாரம் இங்கும் இடம் பெறுகிறது.

இவ்வாறு நித்திய பூசைகள் காலை 6 மணிக்கும், மத்தியானம் 12 மணிக்கும், மாலை 5 மணிக்கும் நடைபெறுவது வழக்கம்.

மத்தியான வழிபாட்டில் மாத்திரம் வெளி வீதியில் இருக்கும் வைரவருக்கும், சரஸ்வதிக்கும் வழிபாடு இடம்பெறும். (இங்கிருந்து பக்தர்களால் நேர்த்தியின் பொருட்டுக் காவடி, பாற்குடம் என்பன எடுப்பதும் உண்டு)

நித்திய வழிபாட்டில் பக்தர்களின் விசேட ஏற்பாட்டில் வழிபாடுகள் அபிடேகங்கள் என்பனவும் இடம்பெறுவதுண்டு. இவ்வாலயத்தின் மிகச் சிறப்பான அம்சம் யாதெனில் பக்தர்களின் விருப்பத்திற்கும் நேரத்திற்கும் ஏற்ப கலியாணப் பூசை பூசையின் ஒரு அங்கமாக இடம்பெற்று, மணமகளுக்குத் தாலி கட்டும் வைபவம், மூலவர் சந்நிதியிலோ வள்ளியம்மன் சந்நிதியிலோ இடம் பெறுவதுண்டு. ஒவ்வொரு வழிபாட்டின் முடிவிலும் விபூதி, தீர்த்தம், மருந்து எனப்படும் அமுதும், வில்வம், சந்தனம் என்பனவும் வழங்கப் படும்.

## ஆலய விசேட வழிபாடுகள்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை களிலும் விசேட வழிபாடு நடைபெறுவதுண்டு. விசேட வழிபாட்டுக் காலங்களில் நீராட்டலும் அலங்கார தீபங்களும் இடம்பெறுவது வழக்கம்.

தைப்பூசம் : விசேட அபிடேகம் வேற் பெருமான் வீதிவலம் வருதல் ஆகியன இடம் பெறும்.

மாசி மகாசிவராத்திரி : நான்கு சாமமும் விசேட அபிடேக பூசை நடைபெறும். இரவு வேற்பெருமான் வீதி வலம் வருவார்.

பங்குனி உத்தரம் : விசேட அபிடேகமும், வேற்பெருமான் உற்சவமும் இடம் பெறும். அத்துடன் வெளி வைரவர் வழிபாடு ஆரம்பித்த தினத்தையொட்டிய விசேட பூசை அங்கு இடம்பெறும். பங்குனி பத்தொன்பதாம் திகதி மூலவர் பரிவார தெய்வங்களுக்கு சங்காபிஷேகம் இடம் பெறும். கிரியைகள் எதுவுமற்ற சங்குகளினால் நீராட்டல் நடைபெறும். பங்குனி 29ம் திகதி கோயிற் புனருத்தாரணம் செய்தமையை முன்னிட்டு விசேட வழிபாடுகள் இடம்பெறும்.

சித்திரை : சித்திரைப் பூரணைக்கு விசேட அபிடேக ஆராதனைகளும், சித்திரைக் கஞ்சிவார்ப்பும் இடம்பெறும். வருடப் பிறப்பன்று விசேட வழிபாடுகள் இடம்பெறுவதுண்டு. வேற்பெருமான் வீதி வலம் வரும் வைபவமும் இடம் பெறும்.

வைகாசி : வைகாசி விசாகத்திற்கு விசேட அபிடேகமும் உற்சவமும் இடம்பெறும்.

ஆனி : ஆனியில் நடுச்சாமத்தில் பாக்கு

நீரினைக்குச் சங்கு சேமக்கல சகிதம் பூசாரியார் சென்று கடல் தீர்த்தம் எடுத்து வந்து 7 நாள் விளக்கெரிய விட்டு 7ம் நாள் குளிர்த்திப் பொங்கல் இடம்பெறும்.

ஆனி உத்தரம் : விசேட அபிடேகமும் உற்சவமும் இடம்பெறும். அத்துடன் சின்ன ஆண்டியப்பர் பூசையும் இடம் பெறும். இவ்வழிபாட்டில் சின்ன ஆண்டியப்பன் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் கறியமுது படையல் செய்வர்.

ஆடி : ஆடி அமாவாசை கழிய ஆவணிப் பௌர்ணமிக்கு தீர்த்தம் வரக்கூடியதாக 15 அல்லது 16 நாள் மகோற்சவம் இடம்பெறும்.

புரட்டாதி : விஜயதசமியில் புராணப் படிப்பு ஆரம்பமாகி கந்தசட்டி முடிய முருகன் திருக்கல்யாண வைபவத்தில் புராண படனம் முடிவடைகின்றது.

ஐப்பசி : ஐப்பசி வெள்ளிக்கிழமை தோறும் விசேட அபிடேக ஆராதனைகள் இடம்பெறும்.

கார்த்திகை : திருக்கார்த்திகையில் இரவு உற்சவம் இடம்பெறும். அந்நேரத்தில் ஆலயத்திலுள்ள அகல் விளக்குகள் குத்துவிளக்குகள் உட்பட அனைத்துத் தீபங்களும் ஏற்றப்படும். விநாயக துஷ்டிக்கு விசேட பூசை இடம்பெறும். உற்சவமும் உண்டு. கார்த்திகைக் கடைசி ஞாயிற்றுக்கிழமை பெரிய ஆண்டியப்பன் பூசை இடம்பெறும். பெரிய ஆண்டியப்பன் வம்சத்தைச் சார்ந்தவர்கள் இப்பூசையில் இறைவனுக்குக் கறியமுது படையல் செய்து அடியவர்களுக்கு வழங்குவர். சங்கப் பாடல்கள் குறிஞ்சித்தெய்வமான முருகனுக்கு தேனும், தினையும் விசேட நிவேதனப் பொருட்களாகக் குறிப்பிடுகின்றன. மலையில் விளையும் பயிரான தினையை குறிஞ்சித் தெய்வமாம் முருகனுக்குப் படையல் செய்தனர். சந்நிதி முருகன் கோவிலில் இடம்பெறும். மாவிளக்குப் போடுதல் என்னும் நடைமுறை மேற்கூறப்பட்ட தொன் மரபின் எச்சமாகக் காணப்படுகின்றது. தினைமாவிலே தேனைக் கலந்து பிசைந்து களியாக்கிப் பின்னர் அதிலே சிறுசிறு சுட்டி விளக்குகளையும், பெரிய பரந்த தாம்பாளம் போன்ற அமைப்பிலான விளக்குகளையும் செய்வர். சிறிய விளக்குகளிலே ஒற்றைத் திரியும், பெரிய விளக்கிலே பன்னிரண்டு திரிகளும் இட்டு நெய்யை ஊற்றி எரிப்பர். திரிகள் எரிந்து முடிந்ததும் அவ்விளக்குகளைப் பிரசாதமாகக் கருதி எல்லோரும் பகிர்ந்துண்பர். சந்நிதியில் கந்தசட்டி விரதகாலத்தில் மாவிளக்கிடும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறும். முருகன் வள்ளியிடம் தேனும் தினைமாவும் பெற்று உண்பதாகக் கந்தபுராணம் கூறுகிறது. அந்த வரலாற்றை நினைவுபடுத்துவதாகவும் மாவிளக்குப் போடுதல் அமையலாம் என்பர். மார்கழியில் திருவெம்பாவைக் காலங்களில் உதய வேளை 4.30 மணிக்கு விசேட வழிபாடு இடம்பெறும். அக்காலத்தில் வாதவூர டிகள் புராணப்படனம் இடம்பெறும்.

மார்கழி : திருவாதிரையில் அதிகாலையில் விசேட அபிடேக ஆராதனைகளும் அன்றைய தினம் திருவாதவூரடிகள் அருளிய திருப்பள்ளியெழுச்சியும் அதன் பின் இயற்றமிழ் போதகாசிரியர் வல்வை வைத்தியலிங்கம் பிள்ளை உபாத்தியாயர் இயற்றிய சந்நிதி முருகன் திருப்பள்ளியெழுச்சியும் இடம் பெறும். அத்துடன் முருகன் திருவிழா இடம்பெறும்.

## சுவாமி கதிர்காமம் போகும் விழா

சந்நிதி முருகனே கதிர்காமத்தில் திரு விழா நடைபெறும் பொழுது எழுந்தருளி கின்றார் என்ற ஐதீகம் இவ்வாலயத்தில் உண்டு. இதன் காரணமாகக் கதிர்காமக் கொடியேற்றத்திலன்று மாலை மைம்மல் நேரத்தில் ஆலய வாசலில் இருந்து சுமார் 100 யார் தூரம் வரைக்கும் செல்பாதை யில் அகல் விளக்குகள் ஏற்றிப் பூரண கும்பங்கள் வைத்து பிரதம குருக்களால் சந்நிதி முருகனை வழிஅனுப்பும் வைபவம் இடம்பெறும். பயணப்பூசையில் பெருமானு க்கு உழுத்தம்பிட்டு (பயணப்பிட்டு என்று அழைக்கும் வழக்கு உண்டு) படைக்கப் படும்.

மருதர்-கதிர்காமரிடம் முருகன் தான் கதிர்காமக் கொடியேற்றத்திற்கு போவதா கவும் அதற்குச் சாப்பாடு தரும் படி கேட்டதாகவும் அவர் உழுத்தம் பிட்டுக் கொடுத்ததனால் இவ்வைபவத்திற்குக் உழுத்தம் பிட்டே படையல் செய்யப் படுகின்றது.

சந்நிதியான் கதிர்காமத் தீர்த்தத்தி லன்று இரவு 12 மணிக்குக் கதிர்காமத்தில் இருந்து திரும்பி வந்து தனக்குப் பசிக்குதென்று மருதர்-கதிர்காமரைக் கேட்க, பயறு தான் இருக்கிறதென்று சொல்லி அவித்து, அதற்குச் சக்கரை தேங்காய் முதலியன இட்டுத் துவைத்துக் கொடுத் தார் என்பது ஐதீகம். எனவே அன்றைய தினம் பயற்றம் துவையல் முருகனுக்குப் படையல் செய்யப்படும்.

## கந்தசஷ்டி

கந்தசஷ்டி விரதகாலமே கோயிலின் மிக விசேட தினங்களாகக் கொண்டாடப் பட்டு வருகின்றது. என்றுமில்லாத அமைதி யும், புனிதமும் சந்நிதியில் அப்போது குடிகொண்டிருக்கும். இவ்வாறு நாட்களும் விசேட பூசைகள் இடம்பெறும். கந்தசஷ்டி முடிவு நாளின் இறுதி நிகழ்வான சூரன்போர் நிகழ்ச்சி மிகவும் சிறப்பான ஒன்றாகும். அன்றைய தினம் வேற்பெரு மானுடன் ஆறுமுகப் பெருமானும் வீதிவலம் வந்து சூரன் போர் நிகழ்ச்சி இடம்பெறும்.

கந்தசஷ்டி காலத்தில் உட்பிரகாரத் தில் விரதம் அனுட்டிப்பவர்களுக்கு நேர்த்தியாளர்கள் பழவகைகள், சர்க்கரை சேர்ந்த தீர்த்த அமுது என்பனவற்றை வழங்குவது மரபு. சூரன் போரன்று அதற்குப் பதிலாக இளநீர் கொடுக்கப் படும். அடுத்தநாள் 3 மணியிலிருந்து பாரணைப் பூசை இடம்பெறும். பாரணைப் பூசைத்தினத்தன்று அநேகமாக சந்நிதி யைச் சுற்றியுள்ள எல்லா மடங்களிலும் அன்னதானம் வழங்கப்படும்.

## மகோற்சவம்

சந்நிதி ஆலயத்தில் மகோற்சவ த்திற்கான கொடியேற்றுங் கிரியைகள் இடம்பெறுவதில்லை. இவ்வாலயத்தில் உள்ள உட்திண்ணையில் வள்ளிக்கொடி தானாகவே முளைத்து உற்சவ காலத்தை உணர்த்துகின்றதாகக் கூறப்படுகின்றது. ஏனைய முருகன் கோயில்களிலே இல்லாத சந்நிதியின் தனித்துவமான வழிபாட்டு மரபுகளில் ஒன்றாக இது இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. ஆவணிப் பூர்வபட்சத் திலேயே இங்கு மகோற்சவம் இடம்பெற்று வருகின்றது. ஆவணி பௌர்ணமிக்குத் தீர்த்தம் வரக்கூடியதாக 15, 16 நாள் விழா கொண்டாடப்படுகின்றது. மகோற்சவ காலத்திற்கூட பொது மக்களின் இஷ்ட

சித்திகளை நிறைவேற்றும் வண்ணம் விசேட பூசைகள் இடம்பெற்று வருவது சந்நிதிக்கேயுரிய தனித்துவமாகும். இது சந்நிதி ஆலய வழிபாடு பொதுமக்கள் மயப்பட்டதென்பதை எடுத்துக் காட்டுவதாகும். மகோற்சவ காலங்களில் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் விசேட அபிடேக ஆராதனைகளும் விசேட உபசாரங்களும் இடம்பெறும். கொடியேற்றத்தன்று இரவு வேற்பெருமான் கேடகத்தில் வீதி வலம் வருவார். மகோற்சவ முதல் நான்கு விழாக்களுக்கும் காலை உற்சவம் இல்லை. இரவு மாத்திரம் உற்சவம் இடம்பெறும். 5ஆம் விழாவிலிருந்து காலையும் இரவும் சுவாமி வீதி வலம் வருவது மரபு. செல்வச்சந்நிதி ஆலய வழிபாட்டில் பூச்சோடனைகள் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. பூக்காரர் என்று அழைக்கப்படும் பூ எடுத்தற்றொண்டு செய்வார்கள். சந்நிதி ஆலயத்தில் பூசனை செய்யும் ஐயர்களுக்கு திருமண உருத்துடையவர்களாய் இருப்பார்கள். இதேபோன்று, விளக்கு எடுத்தல்தொண்டு செய்பவர்களும் திருமண உரித்துடையவர்களாய் இருப்பார்கள். மகோற்சவ ஆரம்பத்திற்கு முன் பூத்தொண்டரும், விளக்குத் தொண்டரும் கோயிற் தீர்த்தம் பருகி ஆசார சீலராயிருந்து தமது தொண்டுகளைப் புரிவது மரபு. பூக்காரர் செல்வச்சந்நிதியில் இருப்பது போல் ஈழத்தில் வேறெக் கோயிலுமில்லை என்பர்.[11] பூவினாற் செய்யும் சோடனைகள் சந்நிதியில் தனியிடத்தைப் பெற்று வருகின்றன. இறைவனைப் பூ அலங்காரத்தால் வழிபாடு செய்பவர்கள் பூக்காரர் என்றால் அது மிகையன்று. உற்சவ காலத்தில் பருவமடையாத சிறு பெண்குழந்தைகள் பன்னிருவர் சிறுதட்டில் விளக்கேற்றி முருகனுக்கு ஆரத்தி எடுப்பது அங்கு இடம்பெறும் விளக்குத் தொண்டாகும். கதிர்காமத்திலும் உற்சவ காலத்தில் வேட்டுவகுல மூதாட்டிகள் முருகனுக்கு ஆரத்தி எடுப்பது வழக்கம். விசேட உற்சவ தினங்களிலும் மகோற்சவ நாட்களிலும் சுவாமி வலம் வரும்போது வள்ளியம்மன் ஆலயத்திற் சென்று தங்கி, அங்கு நடைபெறும் வழிபாடுகளை ஏற்றபின் பெருமான் இருப்பிடத்திற்கு எழுந்தருளுவார். உற்சவ காலத்தில் செட்டி பரம்பரையைச் சார்ந்தவர்கள் சுவாமிக்குத் தீவட்டி, குடை என்பன பிடிப்பர். அத்துடன் சுவாமிக்குப் பாத ஜலமும் வார்ப்பர். அதாவது சுவாமி வீதிவலம் வந்து பிரதம வாயிலில் நிற்கும்போது சுவாமியைச் சுற்றி மூன்று முறையும் சுற்றும் போது சுவாமிக்கு வார்க்கும் பாவனையில் ஐயருக்கு ஊற்றுவார். மேலும் இரவுத் திருவிழாவில் வடக்கு வீதியிலிருந்து சுவாமி வாசலுக்கு வரும் வரை "எச்சரிக்கை பராக்கு" கூறப்படும். சுவாமி வெளி வீதியில் உலாவரும்போது அட்டதிக்கிலும் சந்நிதியின் விசேட தீபமாகிய விபூதிக் குவியலில் கற்பூரம் இட்டு எரித்துத் தீபம் காட்டப்படும்.

### திருவிழா வாகனங்கள்

5 ஆம் திருவிழா காலை (மயில் மாலை) பறக்கும் மயில் (அண்மைக் கால கலவரங்களுக்கு முன் வெள்ளி மயில் வாகனம் காலை உற்சவத்திற்குப் பயன் படுத்தப்பட்டது)

6ஆம் திருவிழா - காலை அன்னம் மாலை ஆட்டுக்கடா

7ஆம் திருவிழா - காலை சோடிக்குதிரை மாலை சிங்கம்

8ஆம் திருவிழா - காலை பெரிய

வெள்ளைக்குதிரை மாலை இடபம்

9ஆம் திருவிழா - காலை வெள்ளை யானை மாலை காராம்பசு

10ஆம் திருவிழா - காலை பூங்காவனம் இரத்தினபீடம், இரவு பெரிய வெள்ளைக்குதிரை

11ஆம் திருவிழா - காலை கைலாச வாகனம் மாலை பெரிய மயில்

12ஆம் திருவிழா - காலை ஆட்டுக்கடா, மாலை இந்திர விமானம்

13ஆம் திருவிழா - காலை காராம்பசு நாக சாத்துப்படி மாலை சப்பறம்

தேர்த்திருவிழா அன்று காலை விசேட பூசைகள் நடைபெற்றபின் பல்வேறு மலர்க ளினால் சாத்துப்படி சார்த்தி திரு வாசி என்பன அமைக்கப்பட்டு பிள்ளையார், முலவர், ஆறுமுகசாமி ஆகிய மூர்த்தி கள் வீதி வலம் வருவர். உலாவரும்போது முலவரை வள்ளியம்மனுடன் இருத்திப் பூசைகள் நடைபெறும். பின் மும்மூர்த்தி களும் முறையே மூன்று (கட்டுத்) தேர் களில் வலம் வருவர்.

தீர்த்தத் திருவிழாவன்று அதிகாலை யில் வேற்பெருமான் முடுபல்லக்கில் பல்லக்கின் இருமருங்கிலும் தளப்பத்து ஓலையால் பூத்தொண்டர் அசைத்தபடி செல்ல, வடக்கு நோக்கி வள்ளியம்மன் வாசல் வழியூடே பிள்ளையார் வாசலில் உள்ள குளத்தில் தீர்த்த வாரிதி கொள்வர். சுவாமி பல்லக்குடனேயே நானாவிதமான அபிடேகத் திரவியங்களால் நீராட்டப் பட்டபின் வள்ளியம்மன் சந்நிதிக்குச் சென்று அங்கு மாலை வரையும் அருள் பாலிப்பர்.

தீர்த்த நாளை அடுத்த நாள் மைம்மற் பொழுதில் மௌனத் திருவிழா நடை பெறும். அன்றையதினம் வேற்பெருமான் வள்ளியம்மன் வாசலில் இருந்து தெய்வ யானை அம்மன் வாசலுக்கு மூன்று முறை வருவதும் போவதுமாக ஊடல் உற்சவம் இடம்பெறும். அன்றைய இரவு 7 மணிக்குப் பூக்காரர் பூசை இடம்பெறும். சகல பூத்தொண்டரையும் கோயிற் பூசகர் ஆசீர்வதித்து ஒவ்வொருவருக்கும் பனை ஓலையால் இழைக்கப்பட்ட பெட்டியில் புற்கை வழங்குவர். பூக்காரர்கள் பூசகரு க்குத் தட்சிணை கொடுத்து அகமகிழ்வர்.

சந்நிதி ஆலய வழிபாட்டு முறை ஆரம்பத்தில் ஆகமம் சாராத இயற்கை நெறி வழிபாடாக அமைந்திருந்தமையை யும், காலப்போக்கில் ஆகம மரபு சார்ந்த வழிபாட்டு முறைகள் சமுதாயத்தில் பெற்ற செல்வாக்கின் காரணமாக அவற்றின் பிரதிபலிப்பு சந்நிதியிலும் தாக்கம் செலுத்தி வருவது சந்நிதி வரலா ற்றை ஆராய்பவர்களுக்குப் புலனாகும். அகம மரபு சார்ந்த, ஆகம மரபு சாராத இரு ஆலய வழிபாட்டு முறைகளுக்கும் பக்தியே அடிப்படையாக அமைவதால் இவ்விரு வேறுபட்ட ஆலயங்களையும் வழிபடச் செல்லும் அடியார்களில் ஒரு பகுதியினர் இவற்றின் வேறுபாடறியாது ஆகம மரபுக்குட்பட்ட ஆலய மூர்த்தி பேதங்களாலும், அவற்றிற்கு நடாத்தப் படும் உற்சவங்களாலும் ஈர்க்கப்பட்டு அவற்றை ஆகம மரபு சாராத கோயில்க ளிலும் காண விளைந்ததனால் அவற்றின் செல்வாக்கு இவற்றிற் படிந்திருக்கலாம். எனவே ஆகம மரபின் செல்வாக்கினால் ஆகம மரபு சாராத ஆலயங்கள் தமது தனித்தன்மையை முழுமையாகப் பேண முடியாத நிலை ஏற்பட்டாலும் ஆகமம் கூறும் கிரியை முறைகளும் மந்திரங்களும் முத்திரைகளும் இங்கு கடைப்பிடிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் சமூகநிலையில் உயர்மட்டத்தினரின் ஆகமச் செல்வாக்கின் அழுத்தம் காரணமாக சந்நிதியான் ஆலய வழிபாட்டில் அவர்களுடைய வழிபடு நிலையில் உயர்வடையும் நோக்கில் ஆகமக் கூறுகளின் சிலவற்றைத் தன்னகத்துட் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட தெனலாம். முடிவாக சந்நிதியான் அருள் வழிபாட்டு வேறுபாடுகளுக் கப்பால் பிரவாகித்துக் கொண்டிருப்பது மனங்கொளற்பாலது. அன்னதானக் கந்தன் என்று சிறப்பாக அழைக்கப்படும் சந்நிதியான் அருட் பிரவாகம் சொல்லும் தரமன்று. முடிவாகச் சொன்னால் சந்நதியான் ஆலயக் கதவு திறந்தவுடன் மக்கள் அடையும் சமய அனுபவமாகிய ஆன்மீக உணர்வு வழிபாட்டு மரபுகளைக் கடந்ததொன்றாகும்.

## அடிக்குறிப்பு

1. இலங்கையில் உள்ள முருக ஆலயங்களுட் காலத்தால் முந்தியது மாத்திரமன்றி பல்லின மத மக்கள் நாள்தோறும் ஆயிரக்கணக்கிற் சென்று வழிபடும் அருள்மிகு தலமாக விளங்குகின்றது.
2. மடாலய அமைப்பு முறை எனப்படுவது ஆகம விதிகளுக்கமைந்த கட்டிட சிற்ப அமைப்புகக்ளைக் கொண்டிராதவையாகும்.
3. நாச்சியார். செ.. **இலங்கையிற் கந்தன் கோயில்களிற் பேணப்படும் ஆகமக்கிரியை மரபுகள்,** (முதுகலைமாணிப் பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு. வெளியிடப்படாதது பக். 269-270.
4. சண்முகதாஸ். அ.. மனோன்மணி சண்முகதாஸ். (1989) **ஆற்றங்கரையான்,** வராவொல்லை வெளியீடு. பக். 8.
5. சிவத்தம்பி. கா.. **சந்நிதியான்** சித்திரப்பெருந்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர். சந்நிதி ஆலய வெளியீடு. 1984.
6. Tamil Laxicon, Vol. III, 1982 University of Madras, .
7. வித்தியானந்தன். சு.. (1963-64) ஈழத்தில் முருக வழிபாடு. **இந்து தருமம்,** இலங்கைப் பல்கலைக்கழகம். பேராதனை. பக் 29.
8. சிவத்தம்பி. கா.. சந்நிதியான்.
9. குறிஞ்சி நிலத் தெய்வமான முருகனுக்கு சங்ககாலத்திலிருந்தே பறை அடித்து வழிபாடு ஆற்றியதற்கு சங்கப்பாடல்களில் சான்றுகள் உண்டு. உதாரணம் திருமுருகாற் றுப்படை வரி. "தொண்டகச் சிறுபறைக் குரவை அயர" 197.
10. சண்முகதாஸ். அ.. மனோன்மணி சண்முகதாஸ். ஆற்றங்கரையான் பக்.29.
11. வித்தியானந்தன். சு.. (1963-64) இந்து தருமம். பக். 30.

* இவ்வாய்வுக்குத் தேவையான பலதகவல்கள் செவ்வி காணல் மூலம் பெறப்பட்டவை.
செவ்வி காணப்பெற்றோர் வருமாறு:திரு மாணிக்கனார் கதிரிப்பிள்ளை.
(ஆறுமுகசாமி சந்நிதியின் முன்னாள் பூசகர்)

திரு யோகசிகாமணி. நா.. மாவட்ட நீதிபதி. யாழ்ப்பாணம்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ். ஆய்வாளர்.
மொழி நிறுவனம். கக்சுயின் பல்கலைக்கழகம்.
யப்பான்.